பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

2364

'HATHIBUL HUTHA'
M.M.M. NOORULHAGU J.P
DIPLOMA IN MASS MEDIA
FREELANCE JOURNALIST & WRITER
129B, OSMAN ROAD,
SAINTHAMARUTHU - 05

# ஐக்கிய முஸ்லிம் உம்மாஹ்

## நகல் யாப்பின் விசேட அம்சங்கள்

United Muslim Ummah

# United Muslim Ummah

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருநாமத்தால்

# ஐக்கிய முஸ்லிம் உம்மாஹ் தோன்றுவதற்கு வித்திட்ட காரணிகள்

இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எதுவுமே இங்கை வாழ் பல்லின மக்களின் இனரீதியான இணக்கப்பாட்டை நோக்கிய காத்திரமானதும் முன்னேற்றகரமானதுமான எதுவித முன்னெடுப்புகளையும் செய்யவில்லை.

இனவாதக் கட்சிகள் பின்பற்றிய மேலாதிக்கவாதத்தின் விளைவுகளாக இன அமைதியின்மையும், இனங்களுக்கிடையே பிரிவினைகளுமே தோன்றின. இதனால் முஸ்லிம்களின் சுய அடையாளமும் மிக மோசமாக சிதைந்து போனது.

இதன் பலனாக தோன்றிய அநீதி முஸ்லிம்களால் தெளிவாக உணரப்பட்டதுடன் தமக்காக ஓர் அரசியல் சக்தியின் ஆவலையும் அவர்களிடையே தூண்டியதுடன் ஒரு சுயாதீனமான அரசியல் கட்சி பற்றியும் அவர்களைச் சிந்திக்க வைத்தது.

இந்த சமூக விழிப்பானது மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரம் அவர்களினால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற யாதார்த்தமாக மொழிமாற்றம் செய்யப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும், அதன் இருப்பும் முஸ்லிம்களின் மீள் எழுச்சிக்காலமாக வகைப்படுத்தக் கூடியதாகும்.

2000ம் ஆண்டில் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் மறைவானது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் கட்டமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் கூட்டுத் தலைமத்துவம் என்ற கருதுகோளுக்கு அதனை மாற்றியும் விட்டது.

இன்று அந்தக் கட்சியினுள் இருக்கின்ற சிதறுண்டு செல்லும் சக்திகளை சாந்தப்படுத்தி ஒற்றுமைப்படுத்தும் முயற்சி தோல்வியிலேயே முடிகின்றமையானது முஸ்லிம் சமுகத்தின் பேரிழப்பு மட்டுமன்றி, சுயலாபமும், குறுகிய மனப்பான்மையும் கொண்ட இப்படியான போக்கானது முஸ்லிம் சமுகத்தின பொது நலன் மீதான ஓர் சுமையுமாககும்.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபுக்குப் பிந்திய காலப்பகுதியானது மாற்றுக் கருத்துக்களையும் ஜனநாயகத்தையும் அடக்குவதற்கே கொண்டு சென்றது. இதனால் அந்தக் கட்சி ஒழுங்கற்ற நிலைக்கும், ஒற்றுமையற்ற நிலைக்குமே தள்ளப்பட்டது. இதன் மூலம் அது ஒரு நிச்சயமற்ற நிலைக்கு ஆளாகி குற்றஞ்சாட்டப்பட்டு தற்போது சமூகத்தை மூழ்கடித்துவிடும் நிலைக்கும் வந்து விட்டது.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபுக்குப் பிந்திய காலப்பகுதியின் தலைமைத்துவம் சிதறல்களான பல கட்சிகளின் தோற்றத்தையே காட்டி நிற்கின்றது. இக்கட்சிகள் முஸ்லிம்களின் அவசியத் தேவைகளில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

எமது சமூகத்தின் மேம்பாட்டுக்காக உழைக்கக் கூடிய பொன்னான நேரத்தை இந்தப் பரஸ்பர நாசம் விளைவிக்கும் போட்டியும், ஓயாத சண்டைகளும் அப்படியே விழுங்கிவிட்டன. சமூகத்தின் மேம்பாட்டிற்கு இப்படியான நிகழ்வுகள் ஒருவகை இரக்கமற்ற அவமதிப்பையே தோற்றுவித்துள்ளன. மேலும் இது சமூகத்தின் மீது மிகப்பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இப்படியான குழப்ப நிலையும், எமது இலக்கின் மீதான நஷ்டமும் தற்போதைய இனப் பிரச்சினைத் தீர்வு முன்மொழிவுகளில் ஆரோக்கியமற்ற தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவே உணர முடிகிறது.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முஸ்லீம்கள் உள்ளடக்கப்படவுமில்லை, அவர்களின் சட்டபூர்வமான தேவைகள் பேசப்படவுமில்லை.

மேற்குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானபோது சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் பங்காளியாகவிருந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் தேவைகளையும், உரிமைகளையும் பாதுகாக்க எதுவித நடவடிக்கையுமே செய்யாமலிருந்ததானது அக்கட்சித் தலைமைத்துவத்தின் திறமையின்மையையும், கையாலாகாத்தனத்தையுமே காட்டுகிறன்து.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் தொடரில் முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயம் சம்மந்தமாக எதுவிதமான சாதக முடிவுகளும் முன்வைக்கப்படவுமில்லை, அத்துடன் குறித்த அந்த ஒப்பந்தம் பலமுறை மீறப்பட்டும் கூட எதுவிதமான மாற்று நடவடிக்கைகளும் எப்போதுமே எடுக்கப்படவுமில்லை.

சமாதான முன்னெடுப்புகளை நோக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது அதில் பங்குபற்றிய ஒரேயொரு முஸ்லிம் அரசியல் கட்சியின் பிரதிநிதி முஸ்லிம்களின் துயரங்கள், பிரச்சினைகள் பற்றி எதனையும் அங்கு முன்வைக்கவுமில்லை. தனித்தரப்பாக முஸ்லிம்கள் பங்குபற்றுதல் தொடர்பாக பிரேரிக்கவுமில்லை, சுயமுன்னெடுப்பு மட்டுமே நிறைந்த அந்தக் கட்சியின் தலைமத்துவத்தின் கையாலாகாத்தனத்தையும், வெறுமையையுமே இது வெளிக்காட்டியது. அவரின் இந்தப் போக்கு முஸ்லிம் சமூகத்திற்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியது.

தலைமைத்துவத்தின் இப்படியான வருந்தத்தக்க பிழைகளை உணர்ந்து கொண்ட அக்கட்சியின் அங்கத்தவர்கள் பலர் தலைமைத்துவம் மீதான தமது அதிருப்தியை பகிரங்கமாகவே வெளிக்காட்டத் தொடங்கினர். அவருக்கெதிராக அவர்கள் கிளர்ந்தெழுந்தனர். பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து அவர்கள் நடாத்திய தலைமைத்துவத்திற்கெதிரான போராட்டம் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்படியான இணங்காமைப் போக்கானது அதன் தொடராக தலைமைத்துவத்திற்கெதிராக பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்குமளவிற்கு வளர்ந்தது.

தற்போது அந்தக் கட்சி இன்னுமொரு பிரதான கட்சியின் பின்னிணைப்பு என்றே (ஆய்வாளர்களால்) வகுக்கப்பட்டுள்ளது.

இப்படியான பாதகமான வரலாற்றுத் தவறுகள் முஸ்லிம்களின் மனதில் ஒரு மாற்றுக் கட்சியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

எமது அபிலாஷைகளை வென்றெடுக்கக் கூடிய புதிய மாற்று அரசியல் கட்சியொன்றின் மூலம் தலைவர்களை ஒன்று சேர்க்க வேண்டியதன் அவசியம் தீவடங்கிலும் பல்வேறு பிரதேசங்களில் வாழ்கின்ற பெரும்பான்மையான முஸ்லிம்களிடையே வேருன்றியது.

அதிகார சமநிலையின்மை, ஸ்திரமற்ற நிலை என்பவற்றை இல்லதொழிக்கவும், நீதி, நேர்மை நிறைந்த ஓர் அரசியல் கட்சியை அமைத்து அதன் மூலம் சமூகத்தின் நலனை வென்றெடுக்கவுமென பின்வரும் மிக முக்கிய விசேட தன்மைகள் கொண்ட ஓர் யாப்பு தற்போது வரையப்பட்டுள்ளது:

அ. ஏதேச்சாதிகாரம் மிக்க தலைமைத்துவம் இல்லாமை

ஆ. ஷூறா கவுன்ஸில் என்ற அதியுயர் பீடம்

இ. ஷூறா கவுன்ஸிலின் சம்மதத்துடனேயே அரசியல் பீடம் (politbureau) முடிவுகளை எடுக்கலாம்.

ஈ. ஷூறா கவுன்ஸில் முடிவுகள் எடுக்கும் போது அதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்கக்கூடிய துறைசார் நிபுணர் மஜ்லிஸ்.

மேற்படி விடயங்களே நாம் இந்தக் கட்சியைத் தொடங்குவதற்கான அழுத்தங்களாகும். எதிர்காலத்தில் மறந்துபோகக் கூடாது என்பதற்காகவே இவை இங்கே பதியப்பட்டுள்ளன.

## அத்தியாயம் – I

I. சுருக்கமான தலைப்பும் நடைமுறைத் திகதியும்

இது ஐக்கிய முஸ்லிம் உம்மாஹ் வின் யாப்பு எனக் குறித்துக் காட்டப்படுவதுடன் இந்த யாப்பின் எல்லாப் பிரிவுகளும் அல்லது ஏதாவதொரு பிரிவுடன் ...........ம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதுடன் அவற்றை பொருள் கோடும் போது அவை நடைமுறைக்கு வந்த தினத்திலிருந்து பின்பற்றப்படுவதாகக் கருதப்படும்.

II. கட்சியின் பெயர்

இக்கட்சி இதற்குப்பிறகு ஐக்கிய முஸ்லிம் உம்மாஹ் என்ற பெயருடன் அறியப்படுத்துவதுடன் அழைக்கப்படவும்படும். இதன் பிறகு வரும் பிரிவுகளில் கட்சி என குறிப்பிடப்படும் போது அது ஐக்கிய முஸ்லிம் உம்மாஹ் என்ற கட்சியையே குறிக்கும்.

III. கட்சியின் சின்னம்

கட்சியின் சின்னம் தேர்தல் ஆணையாளரால் ஒதுக்கப்பட்ட .................... என்பதாகும்.

IV. கட்சியின் இலச்சினை

V. கட்சியின் கொடி

கட்சியின் கொடி செவ்வக வடிவில் நீலம், சிவப்பு, பச்சை, வெள்ளை என்ற நிறங்களைக் கொண்ட குறிப்பிடப்பட்ட கொடியாகும்.

VI. கட்சிக் கீதம்

VII. கட்சிச் செயலகம்

இக்கட்சியின் செயலகம் கொழும்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு தாறுல் உம்மாஹ் என்று அழைக்கப்படும்.

# அத்தியாயம் II

## 2. கட்சியின் குறிக்கோள்கள்.

I. முஸ்லிம்களினதும், ஏனையவர்களினதும் தொடர்புடைய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்தலும், அவர்களுடைய நலன் மற்றும் சம சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்தலும்.

II. பாதுகாப்பு, இனம், மதம், அரசியல், கல்வி, காணி, மற்றும் சமூக பொருளாதார நிலைப்பாடுகள் போன்ற இன்னோரன்ன விடயங்களில் முஸ்லிம்கள் மீதான அநீதிகளை இல்லாமல் செய்தல்.

III. இலங்கை ஜனநாயக, சோசலிசக் குடியரசு யாப்பில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ள, மார்க்க நடவடிக்கைகள் எந்தவித இடையூறுமின்றி அனுபவிக்கும் உரிமைககளைப் பாதுகாத்தல்.

IV. முஸ்லிம் சமூகம் ஒரு தனியானதும் சுதந்திரமானதுமான ஓர் இனம் என்பதைப் பேணிப் பாதுகாப்பதோடு அவர்களின் சட்டபூர்வமான உரிமைகளை ஊர்ஜிதம் செய்தலும், நடைமுறைப்படுத்தலும்.

V. வடக்குக் கிழக்கு மாகாணங்களை முஸ்லிம்களின் பாரம்பரிய தாயகமாக அங்கீகரித்தலும் நிச்சயப்படுத்தலும்.

VI. வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை அவர்களின் கௌரவம், கீர்த்தி என்பன பாதுகாக்கப்பட்டு நல்லுறவு பேணப்படக் கூடிய சிறந்த சாதகமான முறைகளில் அமுல்செய்தல்.

VII. முஸ்லிம்களைப் பாதிக்கும் காணிப் பங்கீடு தொடர்பாக எழும் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் சுய உரிமையை இவ்விடயத்தில் பெற்றுக் கொடுத்தல்.

VIII. பாரம்பரியமான எமது பிரதேசங்களை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டும், வெளியேறியும் உள்ள முஸ்லிம்கள் தாம் மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச்செல்லலையும், மீள்குடியேறலையும் ஏற்படுத்தல்.

IX. பொதுவாக மக்களின் அரசியல் அறிவை மேம்படுத்தலும், அவர்களின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை ஏற்படுத்தலும், சர்வதேச வாக்குரிமையை உறுதிப்படுத்தலும்.

X. கட்சியினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள், வேலைத்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்தல்.

XI. பலதரப்பட்ட இனங்களுக்கிடையே ஒற்றுமைக்காவும் அமைதிக்காகவும் பாடுபடலும், இலங்கையின் இறைமையைப் பாதுகாத்தலும்.

XII. இலங்கை மக்களின் அடிப்படை மனித உரிமைகளையும், ஜனநாயகத் தேற்றங்களையும் மேம்படுத்த உழைத்தல்.

XIII. இலங்கையின் பல்லினத் தன்மையுடைய வேறுபட்ட இனங்களின் சுய அடையாளத்தை அங்கீகரித்தலும், கௌரவித்தலும், இனங்களுக்கிடையிலான நட்பு, சமாதானம், சகவாழ்வு என்பவற்றை மேம்படுத்தலும்.

XIV. நாட்டின் சமூக பொருளாதார நடவடிக்கைகள் மேம்பாடடைய உழைத்தலும், அவற்றின் சமபங்கீட்டை உறுதி செய்தலும்.

XV. பலதரப்பட்ட சமூகங்களது பாதுகாப்பு, இனம், மதம், அரசியல், கல்வி, காணி, சமூகப்பொருளாதார நிலைமைகளின் உரிமைகளைப் பாதுகாத்தலும் உறுதிப்படுத்தலும்.

XVI. மேற்குறித்த குறிக்கோள்களை அடைவதற்காக ஜனாதிபதி, பாராளுமன்றம் மற்றும் எனைய தேர்தல்கள் மூலம் இந்நாட்டிலும் பாராளுமன்றத்திலும் அரசியல் சக்தியை பெறுவதற்கான நோக்கத்துடன் இந்த அரசியல் கட்சியை அமைத்து பராமரித்தல்.

## அத்தியாயம் - III

### 3.1 முடிவெடுக்கும் வழிவகைகள்

ஷூறா கவுன்ஸில் எனப்படும் சபையானது ஏகமனதாக அல்லது, அதிகப்படியான வாக்கினால் தீமானங்களை மேற்கொள்ளும்.

ஷூறா கவுன்ஸிலில் 15 பேர் அங்கம் வகிப்பர். அச்சபையின் கோரம் 05 ஆகும்.

### 3.2 ஷூறா கவுன்ஸிலின் கட்டமைப்பு

I. மார்க்கத் தலைவர்கள், கல்விமான்கள், தம்துறைகளில் சாதனைகள் படைத்த நிபுணர்கள் ஷூறாக் கவுன்ஸிலில் அங்கம் வகிப்பர்.

II. இப்படியானவர்கள் இலங்கையில் வாழ்பவர்களாகவோ அல்லது பணி நிமித்தம் வெளிநாடுகளில் வாழ்பவர்களாகவோ இருக்கலாம்.

III. உயர்பீடத்தின் அழைப்பின் பேரில் மேற்குறித்த இவர்கள் ஷூறாக் கவுன்ஸிலில் அங்கம் வகிப்பர்.

IV. ஷூறாக் கவுன்ஸில் அங்கத்தவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவே எந்தவொரு அரசியல் கட்சியினதும் அரசியலில் ஈடுபடமாட்டார்கள்.

V. ஷூறாக்கவுன்ஸில் உறுப்பினர்கள் தாம் நியமிக்கப்பட்டதிலிருந்து 03 வருடங்கள் பணிபுரிவர். இவர்களின் பதவிக்காலம் இவர்களின் முறை முடிவடைவதற்கு முன்பாக கட்சியின் கொள்கைகளுக்கமைவாக அரசியல் பீடத்தின் மூன்றிலொரு பெரும்பான்மையுடன் நீடிக்கலாம்.

3.3 ஷூறா கவுன்ஸில்

உப விதி 3.8 ன்படி அரசியல் உயர் சபைக்கு வழங்கப்பட்ட முடிவெடுக்கும் அதிகாரத்தினை விட எல்லா விடயங்களிலும் ஷூறா கவன்ஸில் உயர்பீடத்தின் ஆலோசனையுடன் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டதாகும்.

3.3.1 ஷூறா கவுன்ஸின் அதிகாரங்கள்.

I. கட்சியாப்பின் நிபந்தனைகளுக்கு அர்த்தம் கூறல்

II. கட்சியின தலைவர், துணைத் தலைவர்கள், தவிசாளர், பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர், தேசிய பிரசாரச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரை கட்சியின் பேராளர் மாநாட்டிற்கு முன்பதாக தெரிவு செய்தல்.

இந்த அதிகாரம் கட்சியின் மூத்த நிலை, கட்சிப்பணியில் திறமையான பங்களிப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு நிறைவேற்றப்படலாம்.

III. அரசியல் உயர்பீடத்திற்கு ஏதாவதொரு பதவிக்காக ஒரு விசேட அங்கத்தவரை நியமித்தல்.

IV. கட்சி உறுப்பினரை நீக்கல், அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றல் அல்லது கட்சியின் யாப்புக்கமைய பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.

V. யாதாவதொரு கட்சி உறுப்பினர் அவரது நடத்தை காரணமாக குற்றவாளியாகக் காணப்பட்டு அங்கத்துவம் இழக்கப்பட்டு, கட்சியில் இருந்து நீக்கப்படின் அரசியல் உயர்பீடம் அவர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்கவென விசாரணைக் குழு ஒன்றை நியமித்து அதன் சிபாரிசுக்கமைய ஷூறா கவுன்ஸில் தீர்மானம் எடுக்கும்.

VI. ஷூறாக் கவுன்ஸில் தனது தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பு, குற்றஞ்சாட்டப்பட்ட உறுப்பினர் தவிர்ந்த ஏனை உயர்பீட அங்கத்தவர்களுடன் இதுபற்றி கலந்தாலேசித்து தனது தீர்மானத்தை இறுதியாக எடுக்கும். விசேட பணிகள் நிமித்தம் ஷூறா கவுன்ஸில் அரசியல் உயர் பீடத்திற்கோ அல்லது விசேட குழு ஒன்றிற்கோ தனது அதிகாரத்தை வழங்கும் உரித்துடையது.

VII. தேர்தல்களில் போட்டியிடல், ஏனைய கட்சிகளுடன் உடன்பாடு கொள்ளல் போன்ற விடயங்களில் தீர்மானம் எடுத்தல்.

VIII. உயர்பீடத்தின் ஆலோசனையுடன் வேட்பாளர் பட்டியலை அங்கீகரித்தலும் அதில் செய்யப்படும் திருத்தங்களை அங்கீகரித்தலும்.

IX. இனப்பிரச்சினை சம்மந்தமான பேச்சுவார்த்தைகள். கலந்துரையாடல்கள். ஆலோசனைக் கூட்டங்கள் என்பவற்றைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களை நியமித்தல்.

3.4 உயர்பீடம் (Supreme Council)

கட்சியின் பிரதிநிதித்துவமும், நிறைவேற்று அதிகாரமும் கொண்ட அமைப்பு கட்சியின் உயர்பீடம் எனப்படும்.

3.5 உயர்பீடத்தின் கட்டமைப்பு

அ. உயர்பீடமானது அரசியல் பீடம், துறைசார் நிபுணர்களின் மஜ்லிஸ் என்ற இரு சபைகளைக் கொண்டதாக அமையும்.

ஆ. கட்சி யாப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களிலும் ஷூறா கவுன்ஸில் தீர்மானம் எடுப்பதற்கு ஏதுவான சிபாரிசுகளை செய்வதற்கான கடப்பாடு அரசியல் பீடத்திற்கு உள்ளது.

3.6 அரசியல் பீடம் (Politbureau)

அரசியல் பீடம் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளின் உயர்பீடமாகும்.

3.7 அரசியல் பீடத் தேர்தல்

அ. கட்சியின் தலைவர், துணைத் தலைவர்கள், தவிசாளர், பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர், தேசிய பிரசாரச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் ஷூறாக் கவுன்ஸிலால் தெரிவு செய்யப்படுவர்.

ஆ. கட்சியின் செயற்குழுவினால் ஏனைய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

3.8 அரசியல் பீடத்தின் அதிகாரங்கள்

அ. கட்சியின் யாப்பின்படியான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல்.

ஆ. கட்சியின் சீரான இயக்கத்தை உறுதி செய்வதற்காக மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவு அமைப்பாளர்களை நியமித்தல்.

இ. வருடாந்த பேராளர் மாநாட்டை ஒழுங்கு செய்தல், பேராளர் மாநாடு மற்றும் மாவட்டப் பேராளர் மாநாடு என்பவற்றைக் கண்காணித்தல்.

ஈ. உப குழுக்களை அல்லது கட்சியின் வேறு சிறு அமைப்புகளை அல்லது சிறப்புக் குழுக்களை அமைக்கவும், கலைக்கவும், மீளமைக்கவும் அதிகாரம் கொண்டது. ஜனாதிபதி, பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சிச்சபை மற்றும் ஏனைய தேர்தல்களுக்கான வேட்பாளரை அல்லது வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுக்குழுவை நியமித்தல்.

உ. தனது உறுப்பினர்களைக் கொண்டோ அல்லது செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டோ தேவையான துணைக்குழுக்களை அமைத்தல் அல்லது வேறு நிர்வாகிகளை நியமித்தல்.

ஊ. கட்சி யாப்பில் ஏற்பட்டுள்ள தவறுகள், பிழைகளை திருத்தல்.

எ. தேவையனபோது காலத்துக்குக்காலம் வரைவுகள், நியதிகள் என்பவற்றை உருவாக்கல்.

ஏ. கட்சியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் உறுப்பினர் எவரையும் கட்சியில் இருந்து இடைநிறுத்தல்.

ஐ. தனது உறுப்பினர்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் மீது விசாரணை நடாத்த ஒழுக்காற்றுக் குழுக்களை நியமித்தல்.

ஒ. ஒழுக்காற்று விசாரணக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆலோசனைகளை ஷூறா கவுன்ஸிலுக்கு முன்வைத்தல்.

ஒழுக்காற்று விசாரணைக்குழு தனது முடிவுகளை இயற்கை நீதிக்கமைவாக எடுக்கும்.

3.12 துறைசார் நிபுணர் மஜலிஸ்

அ. துறைசார் நிபுணர் மஜ்லிஸானது கட்சியின் உயர்பீட உறுப்பினராதலால் ஷூறா கவுன்ஸிலின் இறுதித் தீர்மானத்திற்கு முன்பதாக கட்சி இதன் ஆலோசனையைப் பெறல் வேண்டும்.

ஆ. மேற்குறித்த துறைசார் நிபுணர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாகவும், கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் நேரடித் தொடர்பற்றவர்களாகவும் இருப்பர்.

இ. இவர்கள் ஒரு ஆலோசனை சபையாகவே இயங்குவர். இவர்கள் தாம் நேரடியாகவோ அல்லது மாகாண, மாவட்ட துறைசார் நிபுணர் சபைகளினதோ ஆலோசனைகளை கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் கொண்டு வரும் அபிவிருத்திப்பணிகளில் முன்வைப்பர்.

ஈ. துறைசார் நிபுணர்கள் தமது சேவையை கட்சிக்கு இனாமாகவே செய்வர். எனினும் அவர்கள் தமது பங்களிப்புக்கான உயர்நிலையை எல்லா மட்டங்களிலும் பெறுவர்.

உ. மேற்குறிப்பிட்ட நோக்கங்கங்களுக்காக வழங்கப்படும் துறைசார் நிபுணர்களின் சேவையானது தன்னார்வ ரீதியானதாக இருப்பினும் அவர்கள் எவ்விதமான தப்பபிப்பிராயங்கள். முரண்பாடுகளுமின்றி தமது சேவையில் தொடர்வர்.

3.13 பேச்சாளர்

அ. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட கட்சி உறுப்பினர் கட்சியின் உத்தியோகபூர்வமான பேச்சாளராகும்.

ஆ. கட்சியினால் அதிகாரமளிக்கப்படாத யாராவது ஓர் உறுப்பினர் கட்சி சார்பாக பேசுவதானது ஓர் ஒழுக்க மீறலாகும். அத்துடன் கட்சி யாப்பின்படி அவர் கட்சியின் உறுப்புரிமையை இழக்க நேரிட்டு கட்சியில் இருந்தே வெளியேற்றவும்படலாம். எப்படியாயினும் யாப்பின்படியான ஒழுக்கவியற் கோவையின் பிரிவுகள் இது விடயத்தில் அமுலாகும்.

## அத்தியாயம் - IX

## 11. அரசியல்பீட உறுப்பினர்களின் பணிகளும், கடமைகளும்

### 11.1 தலைவர்

அ. இந்த யாப்பின் வேறிடங்களில் விதந்துரைக்கப்பட்டுள்ள தலைவரின் அதிகாரங்களுடன் பின்வரும் பணிகளும், கடமைகளும் தலைவருக்குரியனவாகும்.

ஆ. தலைவர் தமது பணிகளை நிறைவேற்ற முடியாதவிடத்து அல்லது நாட்டில் இல்லாத போது அவர் உபதலைவர்களில் ஒருவரை தமது பொறுப்புகளை நிறைவேற்ற தற்காலிக தலைவராக நியமிக்கலாம். இந்த நியமனமானது உயர் சபையின் ஆலோசனையுடன் ஷூறா கவுன்ஸிலால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

இ. இந்த நியமனம் ஆகக்கூடியது 03 மாதங்களுக்கே செல்லுபடியாகும். அரசியல் உயர்பீட உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் கோரிக்கையின் பேரில் இந்நியமனம் ஷூறாக்கவுன்ஸிலால் எந்த நேரமும் இரத்து செய்யப்படலாம்.

ஈ. ஷூறாக் கவுன்ஸிலில் அங்கத்துவத்திற்காக யாப்பின் விதிகளுக்கமைய விசேட உறுப்பினர்களை அழைக்கும் உரிமை தலைவருக்கு உண்டு.

உ. இந்த உரிமை அமுலாக்கத்தின்போது தலைவர் உயர்பீட உறுப்பினர்களின் ஆசேனையைப் பெறவேண்டும்.

### 11.2 துணைத்தலைவர்கள்

தற்காலிக தலைவராக தலைவரால் நியமிக்கப்படும்போது கிடைக்கும் அதிகாரங்கள் தவிர துணைத் தலைவர்களுக்கு தலைவர் வழங்கும் அதிகாரங்கள் மட்டுமே இருக்கும்.

### 11.3 தவிசாளர்

அ. செயற்குழு கூட்டங்கள் அனைத்தையும் தலைமை தாங்கி நடாத்தல்.

ஆ. தலைவர் இல்லாதபோது தலைவர் தலைமை தாங்க வேண்டிய கூட்டங்களைத் தலைமை தாங்கி நடாத்தல்.

### 11.4 பொதுச்செயலாளர்

அ. கட்சி தொடர்பான சகல ஆவணங்களும் பொதுச் செயலாளரின் பாதுகாப்பிலேயே இருக்கும்.

ஆ. தாறுல் உம்மாஹ் என்ற கட்சியின் தலைமையக நிருவாகத்தின் மொத்தப் பொறுப்பும் ஊழியர்களின் பொறுப்பும் இவரையே சார்ந்தது.

இ. தலைவர், அரசியல் உயர்பீடம், ஷூறா கவுன்ஸில் ஆகியோரின் எல்லா அறிக்கைகளையும் பொதுச் செயலாளரே வெளியிடவேண்டும்.

ஈ. தேர்தல் ஆணையாளருடன் கட்சியின் அனைத்து அரசியல் தொடர்பாடல்களையும் செய்ய பொதுச் செயலாளரே அதிகாரம் பெற்றவராவார்.

## 11.5 தேசிய அமைப்பாளர்

அ. மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களை நியமிக்க சிபாரிசு செய்யும் பொறுப்பு தேசிய அமைப்பாளருடையதாகும்

ஆ. பேராளர் மாநாடு, மாவட்ட பேராளர் மாநாடு என்பனவற்றை அரசியல் பீடத்தின் ஆலோசனையுடன் ஏற்பாடு செய்யும் பொறுப்பு இவருடையதாகும். அங்கத்தவர்கள் சேர்ப்பு, அங்கத்தவர் இடாப்பு பேணல், கட்சியின் அடையாள அட்டை விநியோகம் என்பன இவரது பொறுப்பாகும்.

## 11.6 பொருளாளர்

அ. கட்சியின் எல்லா நிதி விவகாரங்களுக்கும், கணக்குப்பதிவுகளுக்குமான முழுப் பொறுப்பும் இவருடையது.

ஆ. கட்சிக்காக ஓர் ஆரோக்கியமான நிதிக் கட்டமைப்பை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பேண இவருக்கு ஆலோசனைகள் வழங்கப்படலாம்.

இ. காசோலைகள், நிதிமாற்றச் சீட்டுக்கள், வாக்குமுறிகள், மற்றும் ஏனைய அனைத்து நிதி ஆவணங்களிலும் தலைவர், பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர்களுடன் சேர்ந்து முதலாவதாக கையொப்பமிடும் பொறுப்பு இவருடையதாகும்.

ஈ. வருடாந்த பேராளர் மாநாட்டின் போது நிதி அறிக்கையினை முன்வக்கும் பொறுப்பும் இவருடையதாகும்.

## 11.7 தேசிய பிரச்சார செயலாளர்

அ. நாட்டின் அனைத்து இடங்களுக்கும் கட்சியின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் பிரச்சாரப்படுத்தும் பொறுப்பு இவருடையது.

ஆ. மேற்குறித்த நடைமுறைகளின்போது மாவட்ட அமைப்பாளர்களின் பணிகுறித்து நிரலிடல், கட்சியின் கொள்கை பரப்பலை மேற்பார்வை செய்தல் என்பன இலரது பொறுப்பு.

இ. கட்சி தொடர்பான நிகழ்வுகள் அடைவுகள் என்பவற்றைப் பதிவு செய்தல், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அவற்றைப் பிரசுரித்தல், வெளியிடல் போன்றவை இவரது பொறுப்பாகும்.

ஈ. கட்சி தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் அனைத்தையும் கண்காணித்து அவற்றை அரசியல் உயர்பீடத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலும் கட்சியின் பிரச்சார விடயத்தில் எப்போதுமே ஒரு சமநிலையைப் பேணுவதும் இவரது பொறுப்பாகும்.

# ஒரே பார்வையில்
# ஐக்கிய முஸ்லிம் உம்மாஹ்வின் கட்டமைப்பு

**ஷூறா கவுன்ஸில்**

**உயர் பீடம்**

அரசியல் பீடம்

துறைசார் நிபுணர் மஜ்லிஸ்

தலைவர்

துணைத் தலைவர்கள்

தவிசாளர்

பொதுச் செயலாளர்

தேசிய அமைப்பாளர்

தேசிய பிரச்சார செயலாளர்

பொருளாளர்

ஏனைய பதவிகள்

மாகாண துறைசார் நிபுணர் மஜ்லிஸ்

மாவட்ட துறைசார் நிபுணர் மஜ்லிஸ்

பிரதேச துறைசார் நிபுணர் மஜ்லிஸ்

